விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 ஆடி 30 ஜூலகம் 16 இதழ் 181
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 14 8 84

## 'பயங்கரவாதிகளின் நோக்கம் தனிநாடு அல்ல!'

### பிரதமர் கருத்து

(கொழும்பு)

''பயங்கரவாதிகளின் நோக்கம்தனிநாடு அமைப்பதல்ல, மாறுக வெளிநாடுகளின்கையில் இலங்கையை கொண்டு வரச் செய்வதே அவர்களின் எண்ணமாகும்'' என்று பிரதமர் ஆர். பிரேமதசா குறிப்பிட்டுள்ளார்.

பண்டுவஸ்நுவர எனும் இடத்தில் நீர்ப்பாசனத்திட்டமொன்றைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் தான் பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் ''இலங்கையில் பயங்கரவாதத்தை முறியடிப்பதற்கு பாராளுமன்றத் தேர்தல்களை நடத்துமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித்தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா குறிப்பிட்டுள்ளார். அவ்வாறுயின் பயங்கரவாதிகள் ஜனநாயகவாதிகளா? என்று கேள்வி எழுப்பினுர்.

(2ம் பக்கம் பார்க்க)

## மதுரையில் தி. மு. க. வினர் உண்ணுவிரதம்

(மதுரை)

இலங்கையின் வடபகுதியில் இடம்பெறும் சம்பவங்களுக்கு கண்டனம் தெரிவித்து

(2ம் பக்கம் பார்க்க)

● பிளவுபடுத்த முயற்சி

# இலங்கைத் தமிழர்களையும் எங்களையும் பிரிக்க முடியாது!

## தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். அறிவிப்பு

(சென்னை)

இலங்கைத் தமிழர்களையும், தமிழக மக்களையும் எந்தச் சக்தியாலும் இனிப் பிரிக்கமுடியாது என்று தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் உறுதியாகத் தெரிவித்துள்ளார்.



தமிழ் நாட்டிலுள்ள தமிழ் மக்களுக்கும், இலங்கையிலுள்ள தமிழ் மக்களுக்குமிடையே பிளவை உருவாக்குவதற்கு முயற்சிகள் நடக்கின்றன என்றும், இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளோர் நிச்சயம் படுதோல்வி அடைவார்கள் என்றும் எம்.ஜி.ஆர். மேலும் கூறினுர்.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையக் குண்டுவெடிப்புச் சம்பவம் சம்பந்தமாக பலர்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென்று நிருபர்களிடம் குறிப்பிட்ட அவர், இலங்கைத் தமிழர்கள் பற்றி இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டார்.

தம்மைச் சூழ்ந்திருந்த உள்நாட்டுப் பத்திரிகையாளர்களுக்கு உணர்ச்சி பொங்க, ''இலங்கைத் தமிழர்களையும், இங்குள்ள ஐந்துகோடி தமிழர்களையும் எவராலும் பிரிக்க முடியாது. அப்படி நினைப்பவர்கள், முயற்சிப்பவர்கள் தமது கைங்கரியத்தில் தோல்விகாண்பார்கள்'' என்றுர் எம் ஜி. ஆர்.

''நமக்கும் அவர்களுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள இறுக்கமான பிணைப்பை சுலபமாக விடுவித்துவிட முடியாது'' என்றுஎம். ஜி ஆர். கூறினுர்.

சென்னை மீனம்பாக்கம் குண்டு வெடிப்பு சம்பந்தமாக நான்கு பொலிஸ் அதிகாரிகள் நிறுத்தி வைக்கப்படவுள்ளனர் என்ற தகவலையும் அவர் தெரிவித்தார்.

## மன்னுர் மக்கள் வீடுகளைவிட்டு வெளியேறினர்

[மன்னுர்]

மன்னுர், அடம்பன் பகுதி மக்களில் தொண்ணூறு வீதமானவர்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். நேற்று நடந்த சம்பவத்தினுல் இப்பகுதி மக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

மன்னுரிலுள்ள வர்த்தக நிலையங்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பல இடங்களில் தீவைப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் தெரியவருகிறது.

அடம்பன் கிராமத்தில் ஐயாயிரம்பேர்அந்த இடத்தை விட்டு வெளியேறிச் சென்றதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## விமானநிலைய பாதையில் தீவிரசோதனை

(கட்டுநாயக்கா)

கொழும்பு சர்வதேசவிமான நிலையத்துக்குச் செல்லும் பாதையில், சோதனை முகாம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

விமான நிலையத்துக்குச் செல்லும் சகல வாகனங்களும் தீவிரசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

## 'ராணி' தியேட்டரிலிருந்து ராணுவம் வெளியேற்றம்!

(யாழ்ப்பாணம்)

கடந்த ஐந்து நாட்களாக யாழ்ப்பாணம் பஸ்நிலையத்துக்கு முன்னுலுள்ள ராணித் தியேட்டரில் முகாமிட்டிருந்த ராணுவத்தின் ஒருபிரிவினர் நேற்றுக்காலை 9-30 மணிக்கு வெளியேறினுர்கள்.

கடந்த 9ம் திகதி முதல், இந்தத்தியேட்டரில் இருந்த ஐம்பது ராணுவத்தினர் வெளியேறிச் சென்றுள்ளதாக தியேட்டரின் மனேஜர் ஜனுப் வி. ஆபூபக்கர் தெரிவித்தார்.

தியேட்டரில் ராணுவத்தினர் இருப்பது மேலும் பதட்டநிலை ஏற்படுவதாக உள்ளதென மேலிடத்துக்கு புகார் தெரிவிக்கப்பட்டும் இருந்தது.

## வவனியா பிரேத அறையில் இடமில்லை

(வவனியா)

வவனியா அரசினர் ஆஸ்பத்திரி பிரேத அறையில் சடலங்கள் வைப்பதற்கு இடவசதி இல்லை.

கூடுதலான சடலங்கள் அங்கு பிரேத பரிசோதனைக்கு கொண்டுவரப்பட்டதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தனர்.

அங்கிருந்த சடலங்கள் யாவும் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் காணப்பட்டதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன

## வங்கி இரும்புப்பெட்டி கல்லுண்டாய் வெளியில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலங்கை வங்கி பிரதம கந்தோரில் கொள்ளையடிக்கப்பட்ட இரும்புப்பெட்டி உடைக்கப்பட்ட நிலையில் கல்லுண்டாய் வெளியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

வங்கி உத்தியோகஸ்தர்கள் பொலிசாருடன் சென்று இப்பெட்டியை மீட்டுவந்ததாகக் கூறப்படுகின்றது

பெட்டிக்குள் பணம் இருக்கவில்லை என்றும், சில பத்திரங்களும், காசோலைப் புத்தகங்களும் இருந்ததாகவும் கூறப்படுகிறது

இதேசமயம் வங்கியில் கொள்ளை முயற்சியின் பின் வங்கியில் கைவிடப்பட்ட இரும்புப் பெட்டியிலிருந்த நகைகளும், பணமும் பாதுகாப்பான இடத்திற்கு மாற்றப்பட்டு விட்டதாக கூறப்படுகிறது. (க)

## வவனியா நகரம் வெறிச்சோடியுள்ளது!

(வவனியா)

வவனியா மக்கள் பதட்டத்துடன் வாழ்ந்துவருகின்றனர். இங்கு நடந்த துர்பாக்கியசம்பவங்களைத் தொடர்ந்து இப்பகுதி மக்கள் அச்சத்துடன் வாழ்கின்றனர்

வவனியா ஹொறப்பொத்தானை சந்தியிலுள்ளஹோட்டலுக்குள் நடந்த சம்பவமும், மன்னுர் வீதியில் இடம்பெற்ற சம்பவங்களும் இப்பகுதி மக்களின் நினைவிலிருந்து என்றுமே அகலாது என்று பலரும் பேசிக் கொள்கின்றனர்.

வவனியா நகரம் வெறிச்சோடிக் கிடக்கின்றது. வியாபாரத்தலங்கள் மூடப்பட்டுள்ளன. வாகனப்போக்குவரத்தும் சீர்குலைந்துள்ளது

அதேவேளை வவனியா நகரில் முக்கிய பல வீதிகள் வாகனப்போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டுள்ளது

தபால்கந்தோர் வீதி, பிரதான கடை வீதி, கண்டிவீதி, புதிய பஸ்நிலையம் வரையும், புகையிரதநிலைய வீதி, வாடிவீடு வரையும் வாகனப்போக்கு

(5-ம் பக்கம் பார்க்க)

## வவனியாவில் 6 சடலங்கள் உறவினரிடம் கையளிப்பு

(வவனியா)

வவனியா அரசினர் ஆஸ்பத்திரியில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆறு பேரது மரணம் தொடர்பான மரணவிசாரணைகள் நடைபெற்று சடலங்கள் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன.

முருகேசு செல்லத்துரை (புதூர் 55 வயது) தில்லையப்பலம் ரட்ணம் (புத்தூர் 50 வயது), ஆறுமுகம் தங்கராஜா (வவனியா 12 வயது), செல்லையா ஞானசேகரப் (வவனியா 28 வயது) ராதா

(5ம் பக்கம் பார்க்க)

வடபகுதி சம்பவங்கள்

## தமிழகமார்க்ஸிசகம்யூனிஸ்ட் இந்திராவிடம் கோரிக்கை

(சென்னை)

இலங்கையின் வடபகுதியில் இடம்பெறும் சம்பவங்களுக்கு இந்திய மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு கிளை ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ள அதே வேளையில், இவ்விடயத்தில் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

கட்சியின் தமிழ்நாடு கிளைச் செயலாளர் திரு நல்லசிவம் வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறைப் பகுதிக்கு பத்திரிகையாளர்கள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டதிலிருந்து அங்கு என்னநடைபெறுகின்றது.என்பதை அறிய முடிகிறது என்றும் அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# வரி விளம்பரம்

**கல்வி**

I. C. M. A. மேற்படி பரீட்சையின் மூன்று பாடங்கட்கும் விளக்கமான விடைகள் பெறலாம். நவெம்பர் 81 — 20/-, மே 83 — 30/- நவெம்பர் 83 — 30/, மே 84 —40/- Professional II வகுப்பும் Chartered Prelim auditing வகுப்பும் ஏற்கனவே நடைபெறுகிறது. வன்னியசிங்கம், வைரவ கடாட்சம், பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24424 (1325)

## இடமாற்றம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நீதிமன்றத்தில் கடந்த சில ஆண்டுகளாக நீதவானாக கடமையாற்றிய திரு. கே. கதிரவேற்பிள்ளை மூதூர் நீதிமன்றத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

மூதூர் நீதவானாக கடமையாற்றி வந்த திரு பாலச்சந்திரன் கிளிநொச்சி நீதிமன்றத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவர்களுக்கான பிரிவுபசார வைபவங்கள் கிளிநொச்சியிலும், மூதூரிலும் நடைபெற்றன.

## ரூபவாஹினி

மாலை

- 5-30 'மைட்டி மௌஸ்' (ஆங்கிலம்)
- 6-00 சிறுவர் நிகழ்ச்சி (சிங்களம்)
- 6-30 'கோமாளிகள்' உள்ளூர்த்திரைப்படம் (தமிழ்)
- 6-55 செய்திகள் (தமிழ்)
- 7-15 இளைஞர் விவகாரம் (சிங்களம்)
- 7-45 ஆழ்கடல் ஆராய்ச்சி (ஆங்கிலம்)
- 8-15 செய்திகள் (சிங்களம்)
- 8-35 ஆழ்கடல் ஆராய்ச்சி தொடர்ச்சி
- 9-00 'டிபரன்ற் ஸ்கோக்ஸ்' (ஆங்கிலம்)
- 9-30 செய்திகள் (ஆங்கிலம்)
- 9-50 'ஒலிம்பிக் 84' அரை இறுதி இறுதிப் போட்டிகள்
- 10-30 உலகச் செய்திகள்
- 11-00 நிகழ்ச்சிகள் முடிவு

**பயங்கரவாதிகளின்...**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதைய அரசாங்கம் வடபகுதியிலும் பல அபிவிருத்தி முயற்சிகளை மேற்கொண்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

**மதுரையில்...**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தி. மு. க. தொண்டர்கள் நேற்று முன்தினம் ஒரு நாள் உண்ணாவிரதமிருந்தனர். தி. மு. க. வின் மதுரை மாவட்டக்கிளை ஏற்பாடுசெய்திருந்த இந்த உண்ணாவிரதத்தில் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

## புனரமைப்பு நடவடிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கிராமமுன்னேற்றச் சங்கங்கள் ஆகியவற்றை புனரமைப்புச் செய்வதற்கு மாவட்டகிராம அபிவிருத்தி அதிகாரி திரு. எஸ் குமாரசாமி நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதன் முன்னோடியாக பளை, பூநகரி ஆகிய உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவில் உள்ள கிராம முன்னேற்றச் சங்கங்களும், மாதர்சங்கங்களும் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன


## தங்க நகைகளுக்கு பணவசதி

த பிறுன்ஸ் கம்பனி வழங்கும் மற்றுமொரு புதிய திட்டமாக தங்க நகைகளுக்கு பணவசதி வழங்க முன் வந்துள்ளது. உங்களுக்கு பணநெருக்கடி ஏற்படும்போது எம்முடன் கலந்தாலோசித்து தவணை முறையிலோ குறிப்பிட்ட கால எல்லையிலோ பணத்தை செலுத்தி உங்கள் தங்கநகைகளை திருப்பிப்பெற்றுக்கொள்ளலாம்.

**த பிறுன்ஸ் கம்பனி லிமிட்**
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23680

TFC

எமது அங்கத்தவர்களுக்கு

## ஓர் முக்கிய அறிவித்தல்

நீங்கள் எடுத்துச்சென்ற படக்கொப்பிகளை

**37/12, 1-ம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**

என்னும் முகவரியில் கொண்டுவந்து தருமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

அங்கத்தவர்கள் தங்களுக்குத் தேவையான படக்கொப்பிகளை மேற்குறிப்பிட்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ். மாநகர நிலைமை பாதுகாப்பான முறையில் சீராகும் வரை கீழ்க்காணும் முகவரியில் வியாபாரம் நடைபெறமாட்டாது என்பதை மிகவும் வருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

**M.G.M. VIDEO HOME**
28, Modern Market,
Upstairs, Jaffna.

(1329)


## முதலாண்டு நினைவஞ்சலி

**திருமதி பொன்னுத்துரை நாகம்மா**



தோற்றம்: 27-3-1922
மறைவு: 23-7-1983

இல்லத்தின் ஒளிவிளக்காய், அன்பிற்கும், பண்பிற்கும், ஆதரவிற்கும் இருப்பிடமாய் திகழ்ந்த எம் வாழ்வின் இதய தெய்வம் மறைந்தாலும் எம் கண்ணிலும், கருத்திலும் கலந்திருந்து எம்மை பல்லாண்டு வாழ்விக்க பிரார்த்திக்கிறோம்.

கணவன், மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் உறவினர்,

(1328)



## ஓராண்டு நினைவஞ்சலி

**குலசேகரம் தேவசேகரம்**
[ஒபறேய் தேவன்]

மலர்வு:
17-04-1958

உதிர்வு:
14-08-1983

தேவா! உங்கள் சாவுக்கு இன்று ஒரு வயது ஆனால் உங்கள் இலட்சியங்களுக்கும். எண்ணங்களுக்கும் இன்று ஒரு வயது என்பதையும் நாம் மறக்கவில்லை. உங்கள் இலட்சியங்கள். சிந்தனைகள் விழிப்படையும் போது நீங்கள் மட்டும் கண்களை மூடிவிட்டீர்களே! ஓ! எல்லாம் சுவர்க்கத்திலிருந்து நீங்கள் காட்டும் வழி காட்டல்கள்தானே!

''வீரனுக்கு மரணம் ஒரு தரம் தான் —விலையில்லா
மாறனுக்கு மரணம் இனி இல்லை கரி
காலனவன் கவர்ந்த உயிர் அழியவில்லை — எங்கள்
தேவனுக்கும் மரணமினி எங்கும் இல்லை''

வாழ்க உங்கள் நாமம் — வளர்க உங்கள் இலட்சியம்

பிரிவால் வாடும்

அப்பா, அம்மா, அக்கா, அத்தான்,
தம்பி, தங்கைகள், உறவினர்.

பலாலி வீதி, திருநெல்வேலி. (1331)

## புதிய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஸ்ரீ முத்துமாரி அம்மன் பரிபாலன சபையின் அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப் பட்டனர்.

தலைவர் பிரமஸ்ரீ ச.பஞ்சாட்சரசர்மா, செயலாளர் திரு.சு.இராமலிங்கம். பொருளாளர் திரு.வை.சுப்பிரமணியமும் தெரிவு செய்யப் பட்டனர்.

திரு. பொ.குணரத்தினம் திரு.சி.கந்தையா, திரு சே. சோமசுந்தரம், திரு.மு.பாலசிங்கம் ஆகியோர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

## சவேரியார் கல்லூரி தரமுயர்வு

(மன்னார்)

மன்னார் புனித சவேரியார் கல்லூரி மத்திய கல்லூரியின் தரத்திற்கு தரமுயர்த்தப் பட்டுள்ளது.

இதுதொடர்பான கல்வி அமைச்சின் உத்தரவை மன்னார் கல்வித்திணைக்கள அதிகாரி கல்லூரி அதிபரிடம் கையளித்துள்ளார்.

## சர்வோதயம் உதவி


(புங்குடுதீவு)

ஆத்திமோட்டைக் கிராமத்தில் படிப்பகம் ஒன்றை நிறுவி அதைச்சீரிய முறையில் நடத்தி வரும் ஆத்திமோட்டை இளைஞர் கழகத்துக்குப் புங்குடுதீவு சர்வோதய இயக்கம் பல்வேறு உதவிகளைப் புரிவதென வாக்குறுதியளித்துள்ளது.

## 1ம் ஆண்டு சிராத்ததினம்

**அமரர் பண்டிதர் ஆ. சேயோன் (அப்பு)**
(ஆங்கில ஆசிரியர்)

தோற்றம்; 18-09-1951
மறைவு: 27-07-1983 (வெலிக்கடை சிறையில்)



கடந்த 27-7-83இல் வெலிக்கடைசிறையில் அகால மரணமெய்தி தன்னை சீராட்டி பாராட்டி தாலாட்டி அன்புத்தமிழ் ஊட்டிய அன்னையையும், ஆருயிர் அனைய அக்காவையும், தம்பியையும். தன்அருமை மருமக்களையும் ஏங்கிப் பரிதவிக்கவிட்டு இன்னும் எத்தனையோ அன்பு நெஞ்சங்களையெல்லாம் ஆழாத் துயரில்ஆழ்த்திவிட்டு இன்று தியாகச் சுடராய் அணையாத தீபமாய் தமிழ் மக்கள் இதயத்துள் என்றென்றும் ஒழியாய் விளங்கும் உத்தமா உன் பிரிவால மமததவும வாடுகிறோம். மேதினியில் நாமெல்லாம் உன் எண்ணிமுடியாப்பிரிவை எண்ணி என்னாளும் கண்ணீர் சொரியும்

**தாய், தமக்கை, தம்பி, மருமக்கள்.**

குறிப்பு: சிராத்த தினமாகிய 14-08-84இல் (இன்று) பண்ணாகம் அண்ணா கலைமன்றத்தினரால் பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவிலில் விசேட அபிஷேக ஆராதனையுடன் அன்னாருக்கு அஞ்சலியும் நடைபெறுவதால் உறவினர், நண்பர்கள் அனுதாபிகள், யாவரையும் அண்ணா கலைமன்றத்தினர் அன்புடன் அழைக்கின்றனர். 1330

## நாளைமுடிவு திகதி

**இரசிகமணி கனக செந்திநாதன்**

## நினைவுக் குறுநாவல் போட்டி

★ 1-ம் பரிசு ரூபா 500-00
★ 2-ம் பரிசு ரூபா 300-00

- ★ அமரர் இரசிகமணி கனக செந்திநாதன் அவர்களின் நினைவாக யாழ். இலக்கிய வட்டமும் 'ஈழநாடு'ம் இணைந்து நடத்தும் இக் குறுநாவல் போட்டியில் எழுத்தாளர்கள் எவரும் கலந்து கொள்ளலாம்.
- ★ ஆக்கங்கள் தமது சொந்தப் படைப்புக்கள் என உறுதிப்படுத்தப் பட்டிருக்க வேண்டும்.
- ★ தாளின் ஒருபக்கத்தில் மட்டும் (புல்ஸ்காப்) 30 முதல் 80 பக்கங்களுக்கு மேற்படாதிருக்க வேண்டும்.
- ★ உறையின் இடது மேல் மூலையில் 'இரசிகமணி கனக செந்திநாதன் நினைவுக் குறுநாவல் போட்டி' எனக் குறிப்பிடவும்.

எழுத்தாளர்கள் தங்கள் குறுநாவலை 15-8-84 திகதிவரை அனுப்பலாம்.

★ அனுப்பவேண்டிய முகவரி :

**இரசிகமணி குறுநாவல் போட்டி**
ஈழநாடு வாரமலர்,
த. பெ. எண் : 49,
யாழ்ப்பாணம்.

வடபகுதியில்

# கடல் தொழிலாளர்கள் வறுமையில் வாடுகின்றனர்!

## அமைச்சர் பெஸ்டஸுக்கு உருக்கமான மகஜர்

(பண்டத்தரிப்பு)

மாதகல் பகுதியிலுள்ள கடற்றொழிலாளர்கள் இம் மாதம் 4-ம் திகதி தொடக்கம் மீன் பிடிக்க கடலுக்கு செல்லாது இருப்பதாகவும் இதனுல் அவர்களின் பொருளாதாரம் மிகவும் சீர்கெட்டு வறுமையில் வாடுவதாகவும் மாதகல் கடற்றொழிலாளர் விரிவாக்க சேவைச் சங்கம் கடற்றொழில் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேராவுக்கு அனுப்பி வைத்துள்ள அவசர மகஜர் ஒன்றில் தெரிவித்துள்ளது.

கடற்கரைப் பகுதிகளில் மீன் பிடிக்கச் செல்லும் இப்பகுதி கடற்றொழிலாளர்கள் அடிக்கடி கடற்படையினரால் இம்சைப் படுத்தப்பட்டும், தாக்கப்பட்டும் வருவதாகவும் இதனுல் கடற்றொழிலாளர்கள் பாதுகாப்பாகத் தங்கள் தொழிலை மேற்கொள்ள முடியாது இருப்பதாகவும், இது பற்றி நடவடிக்கை மேற்கொண்டு கடற்றொழிலாளர்களுக்கு போதிய பாதுகாப்பை வழங்குமாறும் இம் மகஜரில் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

சங்கச் செயலாளர் திரு. வி. அருந்தவத்தினுல் அனுப்பி வைக்கப்பட்ட இம் மகஜரின் பிரதிகள் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர், வலி தென்மேற்கு உதவி அரசாங்க அதிபர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஆஸ்பத்திரிக்குள் புகுந்து

# பெண் டாக்டரைப்பயமுறுத்தி

## காயமடைத்தவரைத் தாக்கினுர்களாம்

### 13 சந்தேகநபருக்கு பிடிவிருந்து

(யாழ்ப்பாணம்)

''பலத்தகாயமடைந்த நிலையில் தருமபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த சுப்பிரமணியத்திற்கு பெண் டாக்டர் ஒருவர் சிகிச்சை அளித்துக் கொண்டிருந்த போது சந்தேகநபர் 13பேரும் ஆஸ்பத்திரிக்கு சென்று டாக்டரை பயமுறுத்திவிட்டு,இறந்தவரைத் தாக்கினுர்கள்''

தருமபுரத்தை சேர்ந்த ராமசாமி சுப்பிரமணியத்தின் (30 வயது) மரணவிசாரணையில் மேற்கண்டவாறு சாட்சியங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டது.

யாழ் பதில் நீதவான் க. கேசவன் மரணவிசாரணை நடத்தினுர்.

13 சந்தேக நபர்களையும், கைது செய்யுமாறு பதில் நீதவான் பிடிவிருந்து பிறப்பித்தார்.

சம்பவதினம் 13 சந்தேக நபரும் கோடரி, தடிகளுடன் சென்று இறந்தவரைத் தாக்கியதாகவும், பின், மச்சான் அவரை டிராக்டர் ஒன்றில் ஏற்றி தருமபுரம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்று அனுமதித்ததாகவும், அங்கு 13 சந்தேக நபரும் சென்று பெண் டாக்டரை பயமுறுத்திவிட்டு மீண்டும் இறந்தவரைத் தாக்கியதாகவும் கூறப்பட்டது.

பின்னர், கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானுர்.

மரணவிசாரணை முடிவில் கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. (க)

வேலையில்லாத காலத்திற்கு

# வேதனமும், வேலையும் வழங்குமாறு தீர்ப்பு!

[யாழ்ப்பாணம்]

மீண்டும் வேலை வழங்குமாறு கோரித் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் மனுதாரரை மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும் என்றும் வேலையில்லாத காலத்திற்கு வேதனமாக 19,635 ரூபா வழங்கவேண்டும் என்றும் சாவகச்சேரியிலுள்ள வட பிராந்திய தொழில் நியாய மன்றத் தலைவர் திரு. எஸ். என். குருசாமி தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கில் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த திருமதி விஜயலட்சுமி செல்வராசா, காணி சீர்திருத்த ஆணைக்குழு கொழும்பு, காணி சீர்திருத்த ஆணைக்குழு பளை, ஜனதா தோட்ட அபிவிருத்தி சபை ஆகியவற்றுக்கு எதிராக மனு தாக்கல் செய்திருந்தார்.

மனுதாரர் தாம் 78-ம் ஆண்டு மார்ச் 15-ம் தேதி இரண்டாவது பிரதிவாதியிடம் வேலைக்குச் சேர்ந்ததாகவும், வேலையிலிருக்கும் காலத்தில் 80-ம் ஆண்டு ஜுலை 25-ம் தேதி வேலைநீக்கம் செய்யப்பட்டதாகவும் 80-ஆம் ஆண்டு டிசம்பர் 28ல் விசாரணையின்றித் தனக்குத் திரும்பவும் வேலை கொடுக்கப்பட்டதாகவும், 81 செப்டம்பர் 16ம்தேதி தனக்குக் கொடுத்த கடிதத்தின்படி மீண்டும் வேலையில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டதாகவும் இந்தஇடைநிறுத்த வேலைநீக்கத்தை நிரந்தரமாகக் கருதி மீண்டும் தனக்கு வேலை பெற்றுத் தரும்படியும் வேலையில்லாத காலத்திற்கு வேதனம்பெற்றுத்தரும்படியும் 83செப்டம்பர்19ல்தாக்கல் செய்த மனுவில் கோரி

மனுதார் சார்பில் சட்டத்தரணி தியாகராசா ஆஜரானுர்,

முதலாவது, இரண்டாவது பிரதிவாதிகள் சார்பில் சட்டத்தரணி வல்லிபுரம் ஆஜரானுர், 3வது பிரதிவாதி சார்பில் வி. ஆர். ஆர். சின்னையா பிரதிநிதித்துவமாக வந்திருந்தார்.

முதல் இரண்டு பிரதிவாதிகளும் மனுதாரை வேலைக்கு மீண்டும் எடுக்க சம்மதித்திருப்பதாலும், தற்காலிக வேலை நீக்கத்தை நிரந்திரமாக தரும் படி விடுத்த கோரிக்கைக்கு பிரதிவாதிகள் எதிர்ப்பு தெரிவிக்காததிலும் மனுதாரை 84 செப்டம்பர் 3ல் வேலைக்கு சேர்த்து கொள்ள வேண்டும் என்றும் 84 செப்டம்பர் 3ல் அல்லது அதற்கு முன் வேலையில்லா காலத்திற்கு வேதனமாக 19,635 ரூபா யாழ் உதவி தொழில் ஆணையாளரிடம் கட்ட வேண்ம் என்றும் தீர்ப்பளிக்கப்பட்ட்து. (க)

# மதுவுக்கு அடிமையானவர் கிணற்றுக்குப் பலி!

(யாழ்ப்பாணம்)

மதுவுக்கு அடிமையான ஒருவர் கிணற்றுக்குப் பலியானுர். சாட்சியத்தில் முரண்பாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

அரியாலையைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை தயாளரத்தினத்தின் மரண விசாரணை யாழ். ஆஸ்பத்திரியில், யாழ். பதில் நீதவான் க.கேசவன் முன்னிலையில் நடைபெற்றது.

இறந்தவரின் மனைவி பவளமும், மார்க்கண்டு என்பவரும் சாட்சியமளித்தனர்.

பிரேத பரிசோதனை அறிக்கையில், அடிகாயம் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. அதனை விளக்குமாறு சட்ட வைத்தியஅதிகாரிக்கு பணித்து விசாரணையை ஒத்தி வைத்தார். (க)

(இன்று நல்லூர்க்கந்தன் 13-ம் திருவிழா)

# உய்வழி அருள்வது எந்நாள், கந்தா!

கந்தனே! தினமும் உன்தன்
அரும்புகழ் போற்று கின்றேன்!
கந்தனே! நாளும் உன்தன்
பதமலர் ஏத்து கின்றேன்!!
என்தனைத் தினமும் வாட்டும்
துன்பங்கள் துயர மெல்லாம்
உன்தனில் அருளைக் கூட்டித்
துடைத்திட வேண்டும் ஐயா!

ஐயனே! உன்னை யல்லால்
துணையெனக் காரு மில்லை!
செய்யனே உன்னை யல்லால்
உறவெனக் கேது மில்லை!!
மெய்யனே உன்னை யன்றி
நினைவதற் கெவரு மில்லை!
வெய்யனேன் வெம்பு கின்றேன்!
உய்வழி அருள்வ தெந்நாள்?

நாளதும் போகு தையா
உன்தனை எண்ணி எண்ணி!
காலதும் நோகு தையா
உன்தனைத் தேடித் தேடி!!
நாவதும் சோரு தையா
உன்நாமம் சொல்லிச் சொல்லி!
ஆவதும் எதுவும் காணேன்
நல்லையம் பதியின் வேலா!!

வேலவா! உன்னை நம்பும்
என்தனை ஏற்ப தென்றோ?
வேணவா இதுவொன் றல்லால்
என்தனுக் கேதுவு மில்லை!
கோலமா மஞ்ஞை தன்னில்
தேவியர் இருவர் சூழக்
கோலமா நகராம் நல்லைப்
பதிவளர் கந்த வேளே!!

கந்தனே! குகனே!! போற்றி!
கடம்பமா மணியே போற்றி!!
சிந்தனைக் கினியாய் போற்றி!
சிவனது சுதனே போற்றி!!
என்னுயிர்த் துணையே போற்றி!
எழில்வடி வேலா போற்றி!!
என்னுயிர்க் குயிரே போற்றி!
எந்தையே போற்றி! போற்றி!!

— ச. முருகையா

# ''குப்பைகளை வீடுகளில் புதையுங்கள்'' ஆணையாளர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை சுகாதாரப்பகுதி ஊழியர்கள் பாதுகாப்புக் காரணமாக ஒழுங்காகக் கடமையாற்ற முடியாதிருப்பதால், குப்பைகளை, தங்கள் வீடுகளில் வெட்டி புதைத்து ஒத்துழைப்புவழங்குமாறு யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள பதட்ட நிலைமை காரணமாக சில வீதிகளில் குப்பைகள் அப்புறப்படுத்தாமல் இருக்கிறது.

தற்போது ஊழியர்கள் இக் குப்பைகளை அகற்றுவதில் ஓரளவு ஈடுபட்டு வருகின்றுர்கள்.

நிலைமை சீராகும் வரை பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்குமாறு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

## கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

மாதகல் பகுதிக்கு நிரந்தர கிராம சேவை அலுவலர் ஒருவரைநியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாதகல் கடற்றொழில் விரிவாக்க சேவைச்சங்சம் யாழ் மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் கோரிக்கை விடுத்துள்ளது

# மருந்தென்று தவறுதலாக நஞ்சு குடித்தாராம்!

(யாழ்ப்பாணம்)

மருந்தென்று நினைத்து தவறுதலாக அருகில் இருந்த நச்சுத்திரவகத்தை எடுத்து குடித்ததால் வ. போ. ச. சாரதி மரணமானுர்.

திருநெல்வேலியைச் சேர்ந்த 30 வயதான பரமசாமி கிருஷ்ணராசா என்பவரே மரணமானவராகும்.

யாழ். பதில்நீதவான் க. கேசவன் மரணவிசாரணை நடத்தினுர்

கடுமையான இருமலால் பாதிக்கப்பட்ட இவர், இருமல் மருந்துவாங்கி குடித்துவந்ததாகவும், சம்பவதினம் கடுமையாக இருமியபோது தவறுதலாக அருகில் இருந்தநச்சுதிரவத்தை எடுத்துகுடித்தார் என விசாரணையில் கூறப்பட்டது.

கடந்த ஜுன்மாதம் 20ம் தேதி யாழ். அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர் ஒன்றரைமாதம் சிகிச்சை பெற்றபின் நேற்று முன்தினம் மரணமானுர்.

விபத்துமரணம் எனத்தீர்ப்பளிக்கப்பட்டது. (க)

1984/85 கல்வியாண்டில்

# பல்கலைக்கழகங்களுக்கு 5,645 மாணவர்கள் அனுமதி

[கொழும்பு]

எதிர்வரும் 1984/85 கல்வி ஆண்டில் இலங்கையிலுள்ள சகல பல்கலைக் கழகங்களுக்கும் மொத்தமாக 5,645 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்இது சென்ற ஆண்டினை விட 200 பேர் அதிகமாகும்.

இவற்றில் பேராதனைப பல்கலைக் கழகத்துக்கு 1400 மாணவர்களும், ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்துக்கு 975 மாணவர்களும், கொழும்பு பல்கலைக் கழகத்துக்கு 9 5 மாணவர்களும், களனிப் பல்கலைக் கழகத்துக்கு 805 மாணவர்களும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு 732 மாணவர்களும், ருகுணைப் பல்கலைக் கழகத்துக்கு 630 பேரும் ஏனைய மாணவர்கள் மொறட்டுவ பல்கலைக் கழகத்துக்கும், மடடக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரிக்கும் தெரிவு செய்யப்படுவார்கள் என்று பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு தெரிவித்துள்ளது. [சூ]

# பஞ்சாப்மாநிலத்தில் மத்தியஅரசின் ஆட்சியை நீடிக்க இந்திய அரசியலமைப்பில் திருத்தம்!

புதுடில்லி ஆகஸ்ட் 13 இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் மத்திய அரசின் ஆட்சியை நீடிப்பதற்காக இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தப்படவுள்ளது.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதற்கான பிரேரணை விரைவில் இந்திய பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பஞ்சாப்பில் தற்போது 9 மாத காலமாக மத்திய அரசின் ஜனாதிபதி ஆட்சி நடைபெற்று வருகிறது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் படி இந்தியாவின் மாநிலங்களில் மத்திய அரசு ஒரு ஆண்டு மாத்திரம் ஜனாதிபதி ஆட்சியை நடைமுறைப்படுத்த முடியும்.

பஞ்சாப் மாநிலத்தில் தொடர்ச்சியாக ஜனாதிபதி ஆட்சியை வைத்திருப்பதற்காக இந்த அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்படுகிறது.

அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்தும் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் நடவடிக்கை பஞ்சாப்பில் தொடர்ச்சியாக ஜனாதிபதி ஆட்சி நீடித்திருக்கும் என்பதனை எடுத்துக் காட்டுகிறது இந்த திருத்தத்திற்கு இந்திய எதிர்க்கட்சிகள் இணக்கம் தெரிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [சூ]

## "பொருளாதார அபிவிருத்திக்கு அபி. சங்கங்கள் உதவ வேண்டும்"

(பண்டத்தரிப்பு)

''கிராம அபிவிருத்திச் சங்கங்கள் பெயரளவில் இயங்காது தமது பகுதியின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு பாடுபடவேண்டும் ஒரு கிராமத்தின் வளர்ச்சியில் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பணி முக்கிய இடத்தை வகிக்கிறது. ஆகவே புதிதாக அங்குரார்ப்பணம் செய்யப்படும் இச் சங்கம் நல்ல முறையில் செயற்பட்டு இப்பகுதியின் முன்னேற்றத்திற்கு பாடுபடும் என்று நம்புகின்றேன்''

இவ்வாறு பண்டத்தரிப்பு மத்திய கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அங்குரார்ப்பணப் பொதுக் கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றுகையில் பண்டத்தரிப்பு கிராம சேவை அலுவலர் திரு. எஸ் சுந்தரமூர்த்தி குறிப்பிட்டார்.

பண்டத்தரிப்பு பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் திரு. சபா. நாராயணன் உரையாற்றுகையில்: ''அரசாங்கம் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு கிராம முன்னேற்றத்தில் முக்கிய இடத்தை வழங்கியுள்ளது. இதை இப்பகுதியிலுள்ள சங்கங்கள் நல்ல முறையில் பயன்படுத்தி முன்னேற்றம் காணவேண்டும் என்றும் குறிப்பிட்டார்

பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும், பொலிஸ்-பொதுமக்க்ள் நல்லுறவுச் சபைத் தலைவருமான திரு. ஏ, வி. துரையப்பா. முன்னாள் வர்த்தக சங்கத்தலைவர் திரு. மு. நடராசா, பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. அ. யேசுதாசன் ஆகியோரும் இக்கூட்டத்தில் உரையாற்றினர்கள்.

## இந்திய - கட்டார் ஒப்பந்தம்

(கட்டார்)

இந்தியாவும் கட்டாரும் 5 வருடங்களுக்கு பல்வேறு துறைகளில் ஒத்துழைக்கும் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

நீர்ப்பாசனம், தொழில்நுட்பம் நிபுணர்களைப் பரிமாறுதல் கட்டிடவாக்கம் ஆகிய துறைகளிலேயே இந்த இருநாடுகளும் ஒத்துழைக்க இணங்கியுள்ளன.

## "விவசாயக் கழகங்கள் மூலம் சிறந்த பயனைப்பெறலாம்"

(புலோலி)

''இளம் விவசாயிகள் கழகங்கள் சிறப்பாகச் செயற்படும்போது விவசாயிகள் சிறந்த பயனை அடையமுடிவதுடன் விவசாய அபிவிருத்தி மேம்பாட்டையும் ஏற்படுத்த முடியும். இதனைக்கருத்திற் கொண்டு இளம் விவசாயிகள் கழகங்கள் விழிப்புடன் செயற்படவேண்டும்''

இவ்வாறு புலோலி மேற்கு இளம் விவசாயிகள் கழக அங்குரார்ப்பணக் கூட்டத்தில் உரையாற்றிய யாழ் இளம் விவசாயிகள் கழகப் போதனாசிரியர் திரு. வி. கதிரமலை குறிப்பிட்டார். மேலைப் புலோலி சைவப் பிரகாச வித்தியாசாலையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு விவசாயப் போதனாசிரியர் திரு. இ. கிருஷ்ணபிள்ளை தலைமை வகித்தார் தொடர்ந்து உரையாற்றிய திரு. கதிரமலை குறிப்பிட்டதாவது:

''இளம் விவசாயிகள் கழகங்கள் சிறப்பாக இயங்கவேண்டும் என்பதைக் கருத்திற் கொண்டு விவசாயத் திணைக்களம் பல்வேறு வகையான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது. எனவே இளம் விவசாயிகள் கழகங்கள் இந்நடவடிக்கைகளை முழுமையாகப்பயன்படுத்தவேண்டும்''

கூட்டத்திற்குத் தலைமை வகித்த விவசாயப் போதனாசிரியர் திரு. கிருஷ்ணபிள்ளை இளம் விவசாயிகள் கழகங்களின் நோக்கம்பற்றியும் பலாபலன்கள் குறித்தும் விரிவாக எடுத்துக் கூறினர்.

விவசாய விஸ்தரிப்புச் சேவையாளர் திரு. எம். கணபதிப்பிள்ளை மற்றும் திருவாளர்கள் கே. தங்கராசா, எஸ். ஞானப்பிரகாசம், விவகாய விஸ்தரிப்பு சேவையாளர்களான திருவாளர்கள் பீ. பரமேஸ்வரன், வி. சின்னத்தம்பி, எம். மார்க்கண்டு, பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களாக திரு. கே. சண்முகநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் வீட்டுத் தோட்டப் போட்டியையும், இளம் விவசாயிகள் கழகவிழாவையும் வெகு விரைவில் மிக சிறப்பாக நடாத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது

## "கல்வித்துறையில் முன்னேற வேண்டும்"

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டம் கல்வித்துறையில் துரிதகதியில் முன்னேற்றம்காண வேண்டுமானல் இங்கு நிலவுகின்ற ஆசிரியர்பற்ருக்குறை விரைவில் நீக்கப்படவேண்டும்'' என்று கிளிநொச்சி கனகாம்பிகைக்குளம் வித்தியாசாலை பாடசாலை அபிவிருத்திச்சபை பொதுக்கூட்டத்திற்கு தலைமைவகித்து உரைநிகழ்த்துகையில் பிரஸ்தாப வித்தியாசாலை அதிபரும் இலங்கை தமிழாசிரியர் சங்க கிளிநெச்சிக்கிளை உபதலைவருமான பொன். தில்லைநாயகம் குறிப்பிட்டார்.

திரு. பொன் தில்லைநாயகம் மேலும் பேசுகையில்; ''பாடசாலைகளின் வளர்ச்சி ஆசிரியர்களிடம் மட்டும் தங்கி இருக்கவில்லை. பெற்ரேர் மாணவர் பழையமாணவரின் மேலான ஒத்துழைப்பில்தான் பாடசாலைகள் வளர்ச்சிகாண முடியும். இந்தவகையில் எமது பாடசாலைக்கு சகலரதும் ஆதரவு இருந்துவருகிறது. இது வரவேற்கத்தக்க செயலாகும் என்ருர்.

## "தானத்தில் சிறந்தது சிரமதானம்"

(சாவகச்சேரி)

''தானத்தில் சிறந்த தானம் சிரமதானம். சிரமதானம் செய்வதன்மூலம் நாம் பரந்த சேவையைச் செய்கிறேம் பணச்செலவின்றி பல அபிவிருத்திவேலைகளை செய்வதற்கு இத்தகைய சிரமதானங்கள் வழிவகுக்கின்றன''

இவ்வாறு கைதடிநவீல்ட் பாடசாலை வளவில் கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலைய உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்ட சிரமதானத்தை முடித்து வைத்து உரையாற்றிய நிலையத்தலைவர் திரு. பா. தளையசிங்கம் குறிப்பிட்டார்.

இளைஞர்கள், சிறுவர்கள், பெரியோர்கள் உட்படசுமார் 200பேர் வரை இச்சிரமதானத்தில் கலந்து கொண்டனர்.

## பொன்னலை உற்சவம்

(வண்ணார்பண்ணை)

இலங்கையில் பிரசித்தி பெற்ற இந்து ஆலயங்களில் ஒன்ருன பொன்னலை ஸ்ரீ வரதராசப் பெருமாள் கோவில் வருடாந்த உற்சவம் இம் மாதம் 4ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

இம் மாதம் 20ம் திகதி வேட்டைத் திருவிழாவும் 21ம்திகதி தேர்த்திருவிழாவும், 22ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. 23ம் திகதி பூங்காவன உற்சவத்துடன் இவ் விழா நிறைவு பெறவுள்ளது.

## முழங்காவில் சம்பவம்:

## காயமடைந்த இராணுவவீரரை அமைச்சர் பார்வையிட்டார்

(கொழும்பு)

முழங்காவில் பயங்கர குண்டு வெடிப்புச் சம்பவத்தில் படுகாயமடைந்து கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இராணுவ வீரர்களை, தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித்அத்துலத்முதலி பார்வையிட்டார்.

வலதுகாலில் பலத்த காயமடைந்த இராணுவ வீரர் ஒருவர் அமைச்சர் லலித் அத்துலத்முதலியிடம், தாம் மீண்டும், வடபகுதிக்கு சென்று பயங்கரவாதிகளை எதிர்த்துப் போராட விரும்புவதாகக் கூறினர்.

தென்பகுதி மக்கள் அமைதியாக இருக்கவேண்டுமென்றும் அந்த இராணுவ வீரர் கேட்டுக்கொண்டார்.

காயமடைந்த மற்றெரு இராணுவ வீரர்; தென்பகுதி மக்கள் அமைதியாக இருந்து தமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்றும், தாம் சுகமாகிய பின்னர் மீண்டும் வடபகுதிக்குச் சென்று பயங்கரவாதிகளை எதிர்த்துப்போராட விருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்த முழங்காவில் குண்டு வெடிப்புச்சம்பவத்தில் ஆறு இராணுவ வீரர் பலியாகினர். இருவர் பலத்த காயமடைந்தனர். 8 பேர் எவ்வித காயமும் அடையவில்லை என தெரிவிக்கப்பட்டது. (சு)

45 வருடகால
நம்பிக்கைக்குரிய சேவையுடன்
26%
வட்டி வழங்கும்
இலங்கையில்
மிகப் பழமையானதும்
யாழ்ப்பாணத்தில்
தனது சொந்த நிறுவனத்தில் இருக்கும்
ஒரேயொரு நிதிஸ்தாபனம்
த பினன்ஸ்
கொம்பனி லிமிட்டட்
TFC
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம், போன்: 23680
தலைமை அலுவலகம்:
3-ம் மாடி,
சிலிங்கோ ஹவுஸ்,
கொழும்பு - 1.
மற்றும் ஏனைய
14 கிளைகள் உண்டு.

## லண்டனில் ஆழிக்குமரனின் இறுதி யாத்திரை!

### இலங்கைத் தமிழர் பலர் கலந்தனர்!!

(லண்டன்)

ஆங்கிலக்கால்வாயில் வீர மரணமெய்திய ஆழிக்குமரன் ஆனந்தனின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடந்துமுடிந்தன.

ஆங்கிலக்கால்வாயை நான்கு தடவை நீந்திக் கடந்து உலக சாதனையை நிலைநிறுத்தும் முயற்சியில் ஈடுபட்டபோது, அவர் உயிர்பிரிந்தது.

லண்டனில் சில மாதங்கள் தங்கியிருந்து கால்வாயைக் கடக்கும் முயற்சிக்காக பயிற்சி மேற்கொண்டார்.

இவர்மரணமடைந்த செய்தி கேட்டு, ஆழிக்குமரனின் தாயார், மனைவியார், இரு ஆண் பிள்ளைகள் லண்டன் சென்றனர்.

ஆனந்தனின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடப்பதற்கான ஏற்பாடுகளை அங்குள்ள இவரது சகோதரர்கள் மேற்கொண்டனர்.

தாயாரும், மனைவி மானிலும், குழந்தைகளும், ஆனந்தன் பூதவுடல் மீது விழுந்து கதறியழுதனர்.

லண்டனிலுள்ள இலங்கைத் தமிழர்கள் பலர் இவரது இறுதிக்கிரியைகளில்கலந்துகொண்டனர்.

குவைத்தில் என்ஜினியராகப் பணியாற்றும் ஆனந்தனின் இன்னெரு தம்பியாரும், இலங்கையில் பிரபல நர்த்தகியான இவரது சகோதரி திருமதி ரங்காவும் இறுதிக்கிரியைகளுக்கு கடைசி நேரத்தில் வந்து சேர்ந்தனர்

# "இளைஞர்களை எதிர்க்கவில்லை; ஆனால் எம்மால் பின்பற்றமுடியாது!"

## 'ஐலண்ட்' பத்திரிகைக்கு அமிர் அளித்த பேட்டி

கேள்வி: கூட்டணி தன் சக்தியை இழந்துவிட்டது என்பதை எவ்வாறு மறுப்பீர்கள்?

பதில்: அரசாங்கம் அரசியல் சாசனத்தில் 6வது திருத்தத்தை வாபஸ்பெற்று தமிழ்ப் பகுதிகளில் தேர்தலை நடத்தட்டும், அப்பொழுது தமிழ் மக்களை நாங்கள் பிரதிநிதித்துவம் செய்கிறோமா இல்லையா என்பதை உலகமறியும்.

கே: 1983ல் நடந்த உள்ளூராட்சி தேர்தல்களை கவனிக்கும்பொழுது பொதுத்தேர்தல் ஒன்றில் நீங்கள் போட்டியிடுவதை இளைஞர்கள் அனுமதிப்பார்களா?

ப: அது வேறு விடயம். நாங்கள் ஆறுவது திருத்த சட்டத்தின்கீழ் தேர்தலில் போட்டியிடமாட்டோம், 1977ல் நாம் பெற்றுக்கொண்ட ஆணைக்கு அது முரணானது. நாம் தமிழ்மக்கள் தமது இறைமையை முழுமையாக . பிரயோகிக்கக்கூடிய தேர்தலையே விரும்புகிறோம்.

கே: வடக்கில் முழுமையாகவும் கிழக்கில் ஓரளவுக்கும் சகல ஜனநாயக அமைப்புகளும் செயலிழந்து கிடக்கின்றன. ஜனநாயகத்தில் நம்பிக்கைகொண்ட ஒரு கட்சி என்ற முறையில் கூட்டணியின் நிலை என்ன?

ப: ஜனநாயக நடைமுறை இங்கு முற்றுப்பெற்றுவிட்டது. அரசியல் அமைப்புக்கு உட்பட்டபோராட்டங்களுக்கு இடமில்லை. தமிழ்ப் பகுதிகளில் ஜனநாயகத்தை முற்றுப்பெறச்செய்தது அரசாங்கம்தான். உண்மையில் சொல்லப்போனால் தமிழ் மக்கள் இன்று வாக்குரிமை இழந்து நிற்கிறார்கள். ஜனநாயகவழி முறை மூடப்பட்டுவிட்டது.

கே: இந்த நிலைமையினால் தமிழ்மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள் அல்லவா?

ப: அவர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள், கஷ்டப்படுகிறார்கள், அரசாங்கம் இதனை உணர மறுக்கிறது.

கே: ஜனநாயகவழி மூடப்பட்டுள்ளது என்று கூறுகிறீர்கள், இதே நிலைமை நீடித்தால் கூட்டணி வன்முறையில் ஈடுபடும் என்கிறீர்களா?

ப: இல்லை; நாங்கள் ஒருபோதும் சாத்வீகத்தை கைவிடமாட்டோம் நான் என்ன சொல்கிறேன் என்றால் சாத்வீக போராட்டத்தை நாம் கடைப்பிடிப்போம் என்பதே.

**தமிழ் இளைஞர்கள் வன்முறையின் மூலம்தான் விடுதலையைப் பெறலாம் என்று கருதுவார்களானால் நாம் அதை எதிர்க்கவில்லை. ஆனால் எம்மால் அதைப் பின்பற்றமுடியாது என்று திரு. அமிர்தலிங்கம் கூறியுள்ளார்.**

**'ஐலண்ட்' பத்திரிகையின் நிருபருக்கு தமிழர் விடுதலைக் கூட்டணிச்செயலாளர் திரு. அமிர்தலிங்கம் அளித்துள்ள பேட்டியில் மேலும் ஒருபகுதி இங்கு தரப்படுகின்றது.**

கே: தமிழர் கருத்தை எடுத்துக்கூற பாராளுமன்றத்தில் ஒருவரும் இல்லையே?

ப: உலக அபிப்பிராயத்தை உருவாக்கி சாத்வீக இயக்கங்களின் மூலம் சிங்கள மக்களின் மனச்சாட்சியைத் தூண்டுவதே எமக்குள்ள வழி.

கே: பெருந்திரளாக இளைஞர்கள் கைதுசெய்யப்படுகிறார்களே அதைப்பற்றி என்ன சொல்கிறீர்கள்?

**பதில்:** ஒருவரும் இப்பொழுது பத்திரமாகவில்லை வவுனியா, மட்டக்களப்பு பகுதிகளில் பரவலாக கைது செய்யப்படுகிறார்கள் இந்த இளைஞர்களுக்காக ஆஜராகும் வழக்கறிஞர்கள் கூட கைது செய்யப்படக் கூடும்.

கே: வடக்கில்சட்டஒழுங்கு நிலைமை எப்படியிருக்கிறது? தலைக்கவசம் அணிய வேண்டும் என்பதுகூட புறக்கணிக்கப்படுகிறதே?

ப: இது யாருடைய குற்றம் இது அரசாங்கத்தின் குற்றம். யாழ்ப்பாணத்தில் சட்ட ஒழுங்கு மிக மோசமாகிவிட்டது என்பதனை நான் ஒத்துக்கொள்கிறேன் இந்த நிலைமை வெகுகாலத்திற்குமுன்பிருந்தே ஆரம்பமனது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. சட்டத்தை பராமரிக்க வேண்டியவர்களே சட்டத்திற் கெதிராக நடக்கத் தொடங்கியதிலிருந்தே இது ஆரம்பித்தது. சட்டத்தை மீறிய அவர்கள் சட்டத்தின்கீழ் தண்டிக்கப்படவில்லை.

கே: யாழ்ப்பாண இளைஞர்கள் ஒழுக்கத்திற்கு பெயர் போனவர்கள் ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது அது ஏன்?

ப: இளைஞர்கள் தீவிரப் போக்கை கடைப்பிடிப்பது உலகம் பூராவும் இன்று ஏற்பட்ட நிலைமை யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை கல்வி, உத்தியோகவாய்ப்புகள் போன்றவற்றை அனுஷ்டிக்கப்பட்டு வரும் ஒடுக்கு முறைகளோடு இப்பிரச்னை பின்னிப் பிணைந்து கிடக்கிறது. அதாவது அரசாங்கத்தின் அவமதிப்பிற்கெதிராக யாழ்ப்பாண இளைஞர்கள் கிளர்ச்சி செய்கிறார்கள்.

கே. விடுதலையடைவதற்கு ஆயுதப் போராட்டம்தான் ஒரே தீர்வு என்ற இளைஞர்களின் கருத்தை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா?

ப: வித்தியாசமான சூழ்நிலைகளில் வித்தியாசமான நடைமுறைகளைக்கைக்கொள்ள வேண்டும். தமிழர்கள் இந்த நாட்டில் சிறுபான்மையினர் நாங்கள் இருக்கும் நிலையில் நிராயுபாணிகளான தமிழ்மக்கள் சாத்வீக முறையில்போராடித்தான் நமது சட்டபூர்வமான உரிமைகளை வென்றெடுக்க முடியும். இளைஞர்கள் வேறுவிதமாக சிந்தித்துப்பார்களானால் அதை நாங்கள் எதிர்க்கவில்லை. நாம் அவர்களை பின்பற்றமுடியாது. மகாத்மா காந்தி சாத்வீக முறைகளைக் கைக் கொண்ட அதே சமயம், சுபாஸ் சந்திரபோஸ் ஒரு இராணுவத்தை திரட்டிப் போர் நடத்திக் கொண்டிருந்தார். சாத்வீகபோராட்டமா? அல்லது வன்முறையா? அல்லது இரண்டும் சேர்ந்ததா இந்தியாவிற்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தன என்பதை வரலாற்று ஆசிரியர்கள் தான் முடிவு செய்யவேண்டும்.

(தொடரும்)

# இன்றைய பலன்

மாதம்—ஆடி
திகதி—30 (14-08-1984)
வாரம்—செவ்வாய்க்கிழமை
திதி—திருதியை பின்னிரவு 2-27 வரை
நக்ஷத்திரம்—பூரட்டாதி 12-41 வரை

மேடம்: கவலையின் தாக்குதலால் வேதனைப்படுவீர்கள், சீறிவரும் கோபத்தை அடக்க முடியாமல் திண்டாடுவீர்கள், கொள்கையின் கோணலால் நல்ல சந்தர்ப்பத்தை தவறவிடுவீர்கள்.

இடபம்: இன்னலின் பின்னல் சோர்வைத் தரலாம், கற்றதனால் பயன் இன்று கிடைக்கும், நுட்பமானவேலைகளில் இன்று ஈடுபடுவர், கலை உலகம் சம்பந்தப்பட்டவர்களுக்கு புகழ்குவியும்.

மிதுனம்: மனையில் பூசல்கள் தோன்றிமறையும், தனிவழிப் பயணத்தைத் தவிர்த்துக்கொள்ளவும், நண்பர்கள் சூழ்ச்சிவலை விரிப்பார்கள் இதனால் வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்வீர்.

கடகம்: அறிவுப்பசிக்கு இன்று தாராளமாக விருந்து கிடைக்கும், ஆராய்ச்சிகளில் ஆர்வம் பிறக்கும், குடும்பத்தில் அமைதியான சூழ்நிலை தென்படும், புதிய வாகனம் கொள்வனவு செய்யலாம்.

சிங்கம்: வசதிகள் பெருகும், வாழ்க்கையும் வளமாகும், புத்திரர் வழியால் புகழும் கிடைக்கும், புதியபாதையில் நடை போடுவீர்கள், நண்பர்களிடம் இருந்து வரவேற்புக் கிடைக்கும்

கன்னி: ஆயுதபீடைக்கும் இடமுண்டு, எதிலும் அவதானம் வேண்டும், வெளியிடத்துப் பயணம் வேதனையைத் தரலாம், எண்ணத்தின் தாக்குதலால் நெஞ்சம் புண்ணுகும், பொறுமைநன்று.

துலாம்: களஸ்திர வழியால் மகிழ்ச்சிகரமான சம்பவம் இடம்பெறும், காதலர் வாழ்வில் கனகுஷியானதினம், வாழ்க்கை உற்சாகம் நிரம்பியதாக இருக்கும்.

விருச்சிகம்: கொடுத்தவாக் குறுதியைக் காப்பாற்ற முடியாமல் வேதனைப் படுவீர்கள், மற்றவர்களின்ஏளன பார்வைக்கு இலக்காகலாம், பணத்துடன் பழகுபவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

தனுசு: கைகொடுத்துதவுவதற்கு நண்பர்கள் முன்வருவர், காரியசித்தியும் கிட்டும், நீண்டநாள் எதிரிகள் மீண்டும் நண்பர்களாவார்கள், கடமையாற்றுமிடத்தில் ஒத்துழைப்புக் கிடைக்கும்.

மகரம்; முயற்சியால் உயர்ச்சியுண்டு, விவசாயிகள் வாழ்க்கையில் முன்னேற்றமுண்டு, மேலதிகாரிகளின்ஆதரவு தாராளமாகக் கிடைக்கும்.

கும்பம்: மக்கள் மூலம் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும், உள்ளத்தில் உவகை துள்ளும், சகோதர பாசம் தலைதூக்கும், கைத்தொழில் விருத்திக்கு இடமுண்டு.

மீனம்: குறுக்கு வழியில் இறங்குவதால் சட்டத்தின் பிடியில் மாட்டிக்கொள்ள நேரிடும், திரைமறைவில் உங்கள் நடவடிக்கை கண்காணிக்கப்படும், பொறுமையைப் பேணி நடக்கவும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## சுகாதார கருத்தரங்கு

(பண்டத்தரிப்பு)

காரைநகர் சுகாதார வைத்திய பிரிவில் ஆரம்ப சுகாதார கவனிப்பு பற்றிய மூன்று நாள் பயிற்சி கருத்தரங்கு கடந்த வாரம் காரைநகர் ரெட்பானு சுகாதார வைத்திய நிலையத்தில் நடைபெற்றது.

காரைநகர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கிருஷ்ணதாஸ் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கை யாழ்.பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் கே.மாணிக்கம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

## வவனியாவில் 6 ...

(-1ம் பக்கத் தொடர்ச்சி)

கிருஷ்ணன் செல்வராஜா (வவனியா 18 வயது) ராஜரட்ணம் (வவனியா 28 வயது) ஆகியோரே இறந்தவர்கள் ஆவார்கள்.

வவனியா மாவட்டத்தில் நீதவான் திரு. ஆர். வி. வில்வராஜா மரணவிசாரணையை நடத்தினர். மாவட்டவைத்திய அதிகாரி டாக்டர் சோ. நிரஞ்சன் பிரேதபரிசோதனை மேற்கொண்டார். விசாரணையின்பின் சடலங்களை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிடப்பட்டது.

## வவனியா நகரம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரத்துக்கு தடைசெய்யப்பட்டுள்ளது.

கொழும்பு—யாழ் செல்லும் வாகனங்கள் முதலாம் குறுக்குத் தெருவாக திருப்பப்பட்டு ஹொறவப்பொத்தானை வீதிக்கு வந்து மீண்டும் பிரயாணம் தொடர வழிசெய்யப்பட்டுள்ளது.

# ★ ஒலிம்பிக்

### பதக்கப் பட்டியல்

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| அமெரிக்கா | 83 | 60 | 30 |
| ருமேனியா | 20 | 16 | 17 |
| மே. ஜேர்மனி | 17 | 19 | 23 |
| சீனு | 15 | 8 | 8 |
| இத்தாலி | 14 | 6 | 12 |
| கனடா | 10 | 17 | 16 |
| ஜப்பான் | 10 | 8 | 13 |
| நியூஸிலாந்து | 8 | 1 | 2 |
| யூகோஸ்லாவியா | 7 | 4 | 7 |
| தென் கொரியா | 6 | 6 | 7 |
| பிரிட்டன் | 5 | 10 | 21 |
| பிரான்ஸ் | 5 | 7 | 15 |
| நெதர்லாந்து | 5 | 2 | 6 |
| அவுஸ்திரேலியா | 4 | 8 | 12 |
| பின்லாந்து | 4 | 3 | 6 |
| சுவீடன் | 2 | 11 | 6 |
| மெக்ஸிக்கோ | 2 | 3 | 1 |
| மொரொக்கோ | 2 | 0 | 0 |
| பிரேஸில் | 1 | 5 | 2 |
| ஸ்பெயின் | 1 | 2 | 2 |
| பெல்ஜியம் | 1 | 1 | 2 |
| ஆஸ்திரியா | 1 | 1 | 1 |
| போர்த்துக்கல் | 1 | 0 | 2 |
| கென்யா | 1 | 0 | 1 |
| பாகிஸ்தான் | 1 | 0 | 0 |
| சுவிற்சாலாந்து | 0 | 2 | 2 |
| டென்மார்க் | 0 | 1 | 2 |
| நோர்வே | 0 | 1 | 2 |
| கிரேக்கம் | 0 | 1 | 1 |
| கொலம்பியா | 0 | 1 | 0 |
| ஐவரிகோஸ்ட் | 0 | 1 | 0 |
| பேரு | 0 | 1 | 0 |
| ஜமேக்கா | 0 | 0 | 1 |

## போர்த்துக்கல் வீரர் முதலிடம்



ஒலிம்பிக் பந்தயங்களில் இறுதியாக இடம் பெற்ற மரதன் ஓட்டப் போட்டியில் போர்த்துக்கலைச் சேர்ந்த வீரர் முதலாமிடத்தைப் பெற்றார். இவர் 2 மணித்தியாலங்கள் 9 நிமிடங்கள் 32 செக்கன்களில் தமது ஓட்டத்தை நிறைவு செய்தார்,

இப்போட்டியில் இரண்டாமிடத்தை அயர்லாந்து வீரரும், மூன்றுமிடத்தை பிரித்தானிய வீரரும் பெற்றனர்.

## உதைபந்தாட்டம் பிரான்ஸ் தங்கம்

ஒலிம்பிக் உதைபந்தாட்டப் போட்டியில் பிரான்ஸ் பிரேஸிலை 2—0 கோல்கள் என்ற ரீதியில் வெற்றி பெற்று தங்கப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டது. ஒலிம்பிக் உதைபந்தாட்டத்தில் பிரான்ஸ் தங்கப் பதக்கம் பெற்றது இதுவே முதல்தடவையாகும். இவ் வெற்றியையடுத்து வெள்ளிப் பதக்கத்தை பிரேஸில் பெற்றது.

வெண்கலப்பதக்கத்துக்கான போட்டியில் யூகோஸ்லாவியா இத்தாலியை 2—1 என்ற கோல்கள் ரீதியில் வெற்றி பெற்றது. இத்தாலி உதைபந்தாட்ட உலகக் கிண்ணச் சாம்பியன் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்திரா பாகிஸ்தானுக்கு பாராட்டு

ஒலிம்பிக் ஹாக்கிப் போட்டியில் தங்கப்பதக்கத்தைப் பெற்றுக் கொண்ட பாகிஸ்தான் அணியை பாக். அதிபர் ஜெனரல் ஷியாவுல்ஹக் ஊடாக இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி பாராட்டியுள்ளார்.

''ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் பெற்ற பாகிஸ்தான் அணியைப் பாராட்டும் இந்திய மக்களுடன் நானும் சேர்ந்து கொள்கிறேன்.'' என்று திருமதி காந்தி தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை பல உலகத் தலைவர்களும் பாக். அதிபருக்கு இவ்வெற்றிகுறித்து பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளனர். (கி)

## செய்திகள் ★

### மணிவாக்கு

சுண்டெலி அரிக்கும் சப்தம் நம் காதுக்கு இனிமையாக இருந்தாலும் அது செய்வது நாசமே. அதைப் போன்றதே நாகரிகமும், அதன் முழு விளைவுகளையும் நாம் உணர்ந்துகொண்டால், இக்கால நாகரிகத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது மூடநம்பிக்கையால் தீமை அவ்வளவு இல்லை என்பது விளங்கும்.

— மகாத்மாகாந்தி.

## நமது நோக்கு

# தேசிய தற்கொலை?

சுன்னாகம் குண்டு வெடிப்புச் சம்பவம்போல் இன்னும் எத்தனையோ இப்பத்திரிகை வெளியாகுமுன் நடந்துமுடியலாம்.

இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு சாதகமான அரசியல் முடிவெல்லாம் சிங்கள இனத்தின் அழிவென்று பாடம்பண்ணும் சக்திகள் ஓய்ந்தபாடில்லை. இன்றைய துன்பியல் நாடகத்தின் பீடிகை இதுவே.

இன்றைய ஆட்சிமுறையில் ஜனாதிபதி. நிறைவேற்றும் அதிகாரம்கொண்டவர் என்ற கோதாவில் நாட்டில் நடைபெறும் ஒவ்வொரு சம்பவத்திலும் தொடர்புடையவராக இருக்கிறார்.

சர்ச்சைக்குரிய பெரிய சிறிய விடயங்கள் அனைத்தும் அவருடைய நேரடிக் கண்காணிப்பில் உள்ளன. இது இலங்கைக்குத் தனித்துவமான அமைப்பு.

ஒரு கட்சியின் தலைவர் என்ற அடிப்படையில் இருந்து இலங்கை மக்கள் அனைவரின் ஜனாதிபதி என்ற பதவிக்கு வந்தபோதும் கட்சிப்பாகுபாட்டைத் துறக்காதநிலையில் இன்று தமிழ் மக்கள் நாட்டின் ஜனாதிபதியிடம் நீதியைக் கோருவது எவ்வாறு? படைத் தலைவரென்ற கோதாவில் அவர் நடத்தும் தாக்குதல்கள் தமிழ்மக்களுக்கெதிராகவென்றால் ஆட்சியின் விபரீதம் விளங்கும்.

ஜனாதிபதிக்குப் போட்டியாக கருத்துரைக்கவல்ல ஒருவர்முன்னைநாள்பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா. அவர் இன்றைய நிலையைக் குறித்து கவலை கொண்டது இந்தநாடு சாத்தான் கையில் முற்றாகச் சிக்கிவிடவில்லை யென்பதைக் குறிக்கிறது.

அம்மையார் தமிழர்களை வருத்துவது நியாயமில்லை யென்றும் ஒரு பொதுத் தேர்தலே இன்று இலங்கை மக்களைக் காப்பாற்றக் கூடிய வழி யென்றும் கூறியிருக்கிறார். தேர்தலில் அவர் மோகம் கொள்வது இயற்கை.

தமிழர்களை அழித்து நாட்டைப்பாது காக்கமுடியாது என்பது முன்னை நாள் பிரதமருக்கு மட்டுமல்ல எந்தக் குழந்தைக்கும்- அண்மையில் இலங்கை ராணுவத்துக்குப் பலியான பல தமிழ்பச்சிளங் குழந்தைகள் உட்பட- தெரியும்.

பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலியின் கொள்கை ஜனாதிபதி கற்பித்த கொள்கையாகவே இருக்க முடியும். அதுஎன்னவாக இருக்கும்?

நாட்டின் தமிழர்களில் பெரும்பான்மைத் தொகையினர் யாழ்ப்பாணத்துக்கு வெளியே வசிக்கின்றனர். கணிசமான பங்கு வடபகுதிக்கு வெளியே வதிகின்றனர். அவர்களைப் பாதுகாத்துக் கொண்டால், பயங்கரவாதமும், பயங்கரவாதிகளும் நிறைந்த யாழ்ப்பாணத்தை அழித்து ஒழிப்பதில் தீங்கு எதுவும் இராது என்பது போல் தெரிகிறது.

சிங்களப் பகுதிகளில் தமிழ் மக்கள் கூடுதலாக இருப்பதால் தமிழ் மக்கள் வாழும் வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு என்ன சுய நிர்ணயம் என்ற பித்துப் பிடித்தவாதம் தற்கொலையில் கொண்டே விடும்.

பாகிஸ்தானில் வாழும் முஸ்லிம் மக்கள் தொகையிலும் கூடியதே இந்தியாவில் வாழும் முஸ்லிம்கள் தொகை. பிரிட்டனில்முப்பதுலட்சம் ஐறிஷ் மக்கள் வாழ்கின்றனர்; இதற்காக அயர்லாந்துக்கோ, பாகிஸ்தானுக்கோ சுதந்திரம் அவசியமில்லை என்பதுமுட்டாளின்வாதம்.

சிங்கள மக்கள் தங்கள் மத்தியில் வாழும் தமிழர்களை எந்த ஆத்திர மூட்டும் கட்டத்திலும் பாதுகாத்துக் கொண்டால் இந்த நாட்டைச் குலைக்க முயலும் வடபகுதி பயங்கரவாதத்தை முற்றாக ஒழிக்க முடியுமென்பதே அரசின் இன்றைய முடிவாகும்.

எமது வாதம் என்ன? வடபகுதிபயங்கரவாதத்தை ஒழிக்கும் திட்டம் இன்றைய நிலையில் இங்குவாழும் பொதுமக்களை ஒழிக்கும் திட்டமாகச் செயற்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் தலையெடுக்கும் வன்செயல்கள் அனைத்தையும் - சர்வதேச பயங்கர்வாதத்தின் சின்னமென்றுகொண்டு அழித்தொழிக்க அரசுக்கு வெளிநாட்டுச்சக்திகள் சில உதவத் தொடங்கிவிட்டன.

யாழ்ப்பாணத்தின் அழிவுடன் இந்தப் பயங்கர முயற்சி முடியுமென்று நினைப்பவர் அரசியல் பேதைகளே.

இவ்வித போர் எங்கு தொடங்கி எங்கு முடியுமென்று இன்று எவரும் உறுதி கூற முடியாது.

தமிழ் மக்கள் மட்டுமல்ல தமிழ் பயங்கரவாதிகளும் இந்நாட்டின் மக்கள் என்பதையும் பந்தோபஸ்து அமைச்சர் இடைக்கிடை நினைவு கூருகின்றார்.

இவ்வித ஆழமற்ற தந்திரங்களால் தமிழ் மக்கள் ஏமாந்து விடமாட்டார்கள். வெளிநாட்டு இராணுவம் குறிப்பாக இந்திய ராணுவம் தமிழ் மக்களைப் பாதுகாக்க வேண்டுமென்று நினைப்பதும் நியாயமல்ல; தர்மமும் அல்ல.

இன்று யாழ்ப்பாணத்தில் ஊற்றெடுக்கும் இரத்தஆறு மகாவலியைப்போல நாடனைத்தையும் அழிக்க வல்லது; இவ்வித தேசிய தற்கொலையினின்றும் நாட்டைப் பாதுகாக்க நல்ல சக்திகள் அனைத்தும் ஜனாதிபதிக்கு மனமாற்றத்தை ஏற்படுத்த உடனடியாக உதவவேண்டும்.

# கிளிநொச்சியில் சௌக்கிய சேவைத் திட்டம்!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் வாழுகின்ற மக்களின் சுகாதார நலனை முன்னிட்டு மனித முன்னேற்ற இயக்கம் சௌக்கிய சேவைத்திட்டமொன்றை ஆரம்பிக்கமுன்வருவதையிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இவ்வியக்கத்தினர் சமுதாயத்தில் நலிவுற்ற மக்களின் நல்வாழ்விற்காக அளப்பெரும் சேவைகளை ஆற்றி வருவதையிட்டு பெருமிதமும் கொள்கிறேன்.

இவ்வாறு மனிதமுன்னேற்ற இயக்கத்தினரால் சுகாதார பகுதியினருடன் இணைந்து மேற்கொள்ளப்படும் சௌக்கிய சேவைத்திட்டத் தொண்டர் பயிற்சி ஆரம்பதின விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பயிற்சித் திட்டத்தை ஆரம்பித்து உரையாற்றுகையில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் என். ஜெயநாதன் குறிப்பிட்டார்.

மனித முன்னேற்ற இயக்க இயக்குனரும் கிளிநொச்சிப் பகுதி பங்குத் தந்தையுமாகிய வண பிதா ம.இ.பயஸ் அடிகளார் தலைமையில் கிளிநொச்சி புனித திரேசாள் ஆலயத்தில் இவ் வைபவம் இடம்பெற்றது.

சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட வைத்திய அதிகாரி பி.நவரெத்தினராசா, வண பிதா அமிர்தகுமார், சங் சகோதரி வேட்டன், கமநலச் சேவை நிலையத் தலைவர் கே பாக்கியநேசர், கட்டிடத் திணைக்கள தொழில் நுட்ப உத்தியோகத்தர் எஸ் திருக்கேதீஸ்பரன், சமூகசேவை உத்தியோகத்தர் பொ. நித்தியானந்தன் சுகாதாரவைத்திய அதிகாரி திருமதி ஜி.கந்தசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

அரசாங்க அதிபர் திரு ஜெயநாதன் மேலும் உரையாற்றுகையில்:- மனித முன்னேற்ற இயக்கம் ஆரம்பித்துள்ள ஆரோக்கிய சேவைப் பயிற்சி இப்பிரதேசத்தில்வாழுகின்ற இளைஞர் யுவதிகளுக்கோர் வரப்பிரசாதமாகும். எதிர்காலத்தில் இங்கு அளிக்கப்படும் பயிற்சியின் மூலம் இம்மாவட்ட மக்கள் நல்ல சுகவாழ்வை அடைய முடியும்.

விவசாயிகள் அதிகமாக உள்ள இம் மாவட்டத்தில் உணவு போசாக்கு பற்றாக் குறையால் அவதியுறும் மக்களின் சுபீட்ச வாழ்வை நோக்கமாகக் கொண்டு அரசின் உதவியுடன் பலசேவைத் திட்டங்களைத் தீட்டியுள்ளோம். இதை செயற்படுத்த திட்டமிடல் பகுதியின்உதவியுடன் குழுவொன்றையும் அமைத்துள்ளோம் (என்றார்

### வவனியா
## பொலிஸ் அதிபர் அலுவலகம் மாற்றம்

(வவனியா)

வவனியா பொலிஸ் அத்தியட்சகருடைய அலுவலகம் புதிய இடத்துக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

குண்டு வெடிப்பின்போது சேதமடைந்த கட்டிடத்திலிருந்து தபால் கந்தோருக்கு அருகாமையிலுள்ள வனபரிபாலன அலுவலக கட்டிடத்திற்கு பொலிஸ் அத்தியட்சகருடைய அலுவலகம் மற்றம் செய்யப்பட்டுள்ளது.

## வெளிவாரி பட்டதாரி பரீட்சை விண்ணப்பங்கள்

(கோப்பாய்)

பேராதனைப் பல்கலைக்கழகம் 1984ம் ஆண்டுக்கான வெளிவாரி பட்டதாரி பரீட்சைகளுக்கு விண்ணப்பங்களை கோரியுள்ளது.

கல்கலைக் கழக வெளிவாரிப் பரீட்சைப்பகுதியினரால் வினியோகிக்கப்படும் படிவங்களை பதிவுசெய்த பரீட்சார்த்திகள் பெற்று செப்டம்பர் மாதம் 15ம் திகதிக்குமுன்னர் விண்ணப்பிக்க வேண்டும்.

1984ம்ஆண்டுக்கான விஞ்ஞானமானிப் பரீட்சை, கலைமானிப்பரீட்சைஎன்பன இந்த வருடம் டிசம்பர் மாதம் நடை பெறும்.

கலை முதற் தேர்வு, விஞ்ஞான முதற் தேர்வு என்பன 1985ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் நடை பெறும்.

1983ம் ஆண்டு நடைபெற்ற இறுதிப் பரீட்சை முடிவுகள் அண்மையில் வெளியாகியிருந்தது.

கலைமுதற் தேர்வு விஞ்ஞான முதற் தேர்வு என்பனவற்றின் பரீட்சை முடிவுகள் இன்னமும் வெளியிடப் படவில்லை.

### ஊர்காவற்றுறை
# பொலிஸ் நிலையத்துக்கு குண்டு வீச்சு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்திற்கு நேற்று முன்தினமிரவு குண்டுகள் வீசப்பட்டபோதிலும், பொலிஸாருக்கு எவ்வித காயமும் ஏற்படவில்லை என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

பொலிஸ் நிலையத்திற்கு சேதம் ஏற்படவில்லை என்றும், எவ்வித பொருட்களும் கொள்ளையடிக்கப்படவில்லை யென்றும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

குண்டுவீச்சின் போதுவெடிச் சத்தங்கள் கேட்டதாகவும் கூறப்பட்டது.

அப்பகுதிகளில் இரத்தக் கறை அடையாளம் காணப்படுவதால், தாக்குதல் நடத்தியவர்களுக்கு காயம் ஏற்பட்டிருக்கலாம் என்றும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

(க)

# "குண்டு வெடிப்பால் என்மகன் இறந்தார்"
### சுன்னாகம் மரண விசாரணையில் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

''பொலிஸ் நிலைய குண்டு வெடிப்புக்கு யார் காரணமோ தெரியாது அக்குண்டுவெடிப்பால்ஏற்பட்டகாயத்தினால்என் மகன் இறந்தார்,

சுன்னாகத்தை சேர்ந்த மூத்ததம்பி சண்முகவரதனின் (21வயது) மரணவிசாரணையில் சாட்சியமளித்த அவரின் தந்தை வேலுப்பிள்ளை மூத்ததம்பி மேற்கண்டவாறு கூறினார்.

யாழ் ஆஸ்பத்திரி பொலிஸ் பிரிவில், யாழ் பதில் நீதவான் க. கேசவன் மரண விசாரணை நடத்தினார்.

தந்தை சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது 11-ம் தேதி, சகோதரி சற்குணதேவி மயிலணியிலுள்ள அவரது சிநேகிதி கலா வீட்டிற்குச் சென்றிருந்தார். அவரைக் கூட்டிவர என்மகன் சென்றார். பொலிஸ் நிலையத்தைத் தாண்டித்தான் அவர் செல்லவேண்டியிருந்தது. இரவு 6 மணிபோல் பலத்த வெடிச் சத்தம் கேட்டது. சனங்கள் அக்கம்பக்கம் ஓடினார்கள். கனகரத்தினம் என்பவர் வந்து என்மகன் காயமடைந்து தெல்லிப்பளையிலுள்ள ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகக் கூறினார் நான் பயத்தினால் போகவில்லை. பின் அவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டார். அங்கு சத்திர சிகிச்சைக்குப்பின் அதிகாலை மரணமானார்.

பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டு, விசாரணை ஒத்தி போடப்பட்டுள்ளது.

# யாழ். இலக்கிய வட்டம் செயற்பாடுகளை நிறுத்தியது!

[யாழ்ப்பாணம்]

யாழ். இலக்கியவட்டத்தின் நடவடிக்கைகள் யாவும் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அதன் செயலாளர் திரு. யாழ்வாணன் அறிவிக்கின்றார்.

கதை அரங்கம், கவிதை அரங்கம் முதலான இலக்கிய வட்டத்தின் மாதாந்த நிகழ்ச்சிகள் உட்பட இலக்கிய கர்த்தாக்களான செங்கை ஆழியான். மௌனகுரு, காரை. செ. சுந்தரம்பிள்ளை ஆகியோர் இலங்கைப்பல்கலைக் கழகத்தின் உயர்பரீட்சைகளில் சித்தி அடைந்தமையை முன்னிட்டு அவர்களுக்கு இலக்கிய வட்டம் அளிக்கவிருந்த பாராட்டு விருந்துவைபவம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் நிலைமையைக் கருத்திற்கொண்டு, இவ்வித நடவடிக்கையை எடுத்துள்ளதாக செயலாளர் தெரிவிக்கிறார்.

நீண்டகாலம் இயங்காமல் இருந்து வந்த யாழ். இலக்கிய வட்டம் திரு சசிபாரதி தலைமையில் புதிய வேகத்துடன் செயல்படுவதென்ற பெரு நோக்கோடு புனரமைக்கப்பட்டது தெரிந்ததே.

# யாழ். நகரில் நேற்று....

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் ஒன்பதாவது தினமாக நேற்று வர்த்தக நிலையங்கள் யாவும் பூட்டப்பட்டிருந்தன. இலங்கை வங்கி, மக்கள் வங்கிகளும் பூட்டப்பட்டிருந்தன வீதிகளில் சனநடமாட்டம் காணப்படவில்லை.

(க)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/84 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.